**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032

தொலைபேசி 044-22201337

மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண்.326/மா/2025

நாள் 17.10.2025

ஜீஜீமாத்யூ
சென்னை .... முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்
மண்டலம் 4
பெருநகர சென்னை மாநகராட்சி .... எதிர்மனுதாரர்

சென்னை–21, பழைய வண்ணாரப்பேட்டை, ரத்தின சபாபதி தெரு. கதவு எண்.18, புதிய எண்.61 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜீஜீ மாத்யூ என்பவரின் 11.08.2025 நாளிட்ட மனு இம்முறை மன்ற நடுவத்தில் 12.08.2025 அன்று பெறப்பட்டு 326/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–21, பழைய வண்ணாரப்பேட்டை, ரத்தின சபாபதி தெரு கதவு எண்.18, புதிய எண்.61 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. ஜீஜீ மாத்யூ என்பவர் தனது 11.08.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

"I had filed a Writ Petition No.17607 in June 2023 to Lock and seal the unlicensed godown/trade of Mr. C. Rajendran (M/s Anand Agencies) that was running in Old No.7/1 New No.12/1 Illaya Lane, Tondiarpet. Having received the notice from the Madras High Court on the same, he immediately shifted the godown/trade to Door No.4/2 (Ground floor), East Krishnappa Thottam, 1st Street, Tondiarpet, Chennai-21.

I had brought the subject matter to the attention of the Zonal Officer-4, Greater Chennai Corporation vide online complaint 2023-954EPL. The closure response on 02.08.2023 was that the trade of C. Rajendran was running without licence and notice is given under Section 287 of CCMC act. Thereafter I filed several complaints and reminders regarding the unlicensed trade at the above location on 18.10.2023, 24.02.2024 and there is no response.

On 21.05.2024, I shared the photograph of building construction materials in this site, my online complaint 2024-747 LQM which was closed stating "The site was inspected and no trade activity was found in that place" I was constrained to file a RTI application with the P.I.O. of the Zonal Officer on 26.06.2024 requesting a copy of this

notice that was issued as mentioned in 2023-954EPL.The reply dated 26.07.2024 surprisingly stated "Trade is running with Valid License" but the notice copy alleged to have been issued in August 2023 is not provided to me as a complainant, till date.

The required details was not furnished, hence I filed the first appeal on 03.08.2024 to which I received a reply dated 25.09.2024, R3/1104/2024 with additional details i.e. of Thiru I. Nagarajan, Door No.4/2 East Krishnappa Thottam, 1st Street, Tondiarpet. The trade was running with valid license. Professional Tax No.04-042-IN-05852, License No.04-042-0000-248. Valid upto 31st March 2025.

- Understand that Mr. I. Nagarajan is the owner of the property where this trade is functional. He had filed the profession tax number under the name of M/s Vijaya Traders 04-042-IN-05852, on 08.09.2023.
- The Trade License No.04-042-05237 was obtained on 21.03.2024 which was six months, after the filing of profession tax number.
- The Trade license No.04-042-005237 valid till 31st March 2025 was for Trade / Business: Manufacturing of Cement, under Schedule-1.
- The godown unit is of 120 Sq.ft.
- There is no manufacturing of cement in the subject location, but a storage unit of building construction materials (Blue Metal / Cement Bags / Sand Bags) which requires a storage license.

Mr. C. Rajendran of M/s Anand Agencies doesn't want to run trading of the building construction materials in a legal manner but violating the rules and law. I have brought this to the knowledge by sending various representations. He is now shifting locations and hiding his identity, carrying out the same trade/business. There are several photographs, Video of his staff accessing the materials in this subject location over the last many months. In fact this site/neighbourhood is under CCTV monitoring, that can be verified on its actual usage.

Mr. C. Rajendran of M/s Anand Agencies is being protected with a profession / trade License cover from September 2023 onwards in this location and this glaringly appears to be one of the reason that the then Zonal Officer, Zone-4 waited for six months to file the status report to the Principal Secretary (MA&WS), reference Z.O.IV.RD. C.No.356/2024 dated 30.05.2024. This is now brought to the attention of the Hon'ble Madras High Court vide my Writ Petition No.37612 of 2024.

It is very unfortunate that whenever I bring it to the law enforcing officials, there is no proper response. Taking advantage of the same, M/s Anand Agencies is boldly and repeatedly doing the same illegalities without any fear. This has to be curtailed to end the illegality.

The 04-042-005237/2024-25 License (Manufacturing of cement) that was used to run this trade / godown originally expired on 31.03.2025, thereafter renewed till 31.05.2025.

The godown is functioning without license, hence I sent the last representation on 21.06.2025 to the Zonal Officer & the Revenue Officer of Zone-4 to lock and seal the premises and seize the stored building construction

materials and the action taken be reported to me. Even after 2 months there is no response from the G.C.C. Officials till date. Hence, I am constrained to file the complaint in Form-I [under rule 4] before the Tamil Nadu Local Bodies Ombudsman constituted under section 3 of the Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014 as advised in your letter dated 21.07.2025 for necessary actions against the Greater Chennai Corporation Officials for being mute to my factual representation and wilful dereliction of duty thus allowing the godown / trade to be functional without the rightful license mandated by G.C.C. since August 2023 in the subject location." எனத் தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரின் மேற்கண்ட மனு இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், பெருநகர சென்னை மாநகராட்சி. மண்டலம் 4–க்கு உட்பட்ட தண்டையார்பேட்டை, இளைய தெரு, பழைய கதவு எண் 7/1 புதிய கதவு எண் 12/1–ல் உரிமம் இல்லாமல் சட்ட விரோதமாக கட்டுமான பொருட்களை குடோனில் வைத்து வியாபாரம் செய்வதாக M/s Anand Agencies–ன் உரிமையாளர் திரு. சி. ராஜேந்திரன் என்பவர் மீது மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P. No.17607 of 2023–ல் மேற்கண்ட குடோனை பூட்டி சீல் வைக்க வழக்கு தொடுத்ததால், மேற்கண்ட தனியருக்கு நோட்டீஸ் வழங்கப்பட்டதன் அடிப்படையில், திரு. சி. ராஜேந்திரன் அவ்விடத்தை விட்டு காலி செய்ததாகவும், தற்போது, சென்னை–21, தண்டையார்பேட்டை, கிழக்கு கிருஷ்ணப்ப தோட்டம், முதல் தெரு, பழைய கதவு எண் 4/2–ல் திரு. ஐ. நாகராஜன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் உள்ள தரைதளத்தில் மேற்கண்ட M/s Anand Agencies–ன் உரிமையாளர் திரு. சி. ராஜேந்திரன் என்பவர் உரிமம் இல்லாமல் சட்ட விரோதமாக கட்டுமான பொருட்களை குடோனில் வைத்து வியாபாரம் செய்வதாக பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம் 4–க்கு மனு அளித்தும் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை எனவும், எனவே, மேற்கண்ட உரிமம் இல்லாமல் இருக்கும் குடோனை இதுவரை பூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்காமல் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு தன்னுடைய மனுவில் கோரியுள்ளார். மேலும், ஏற்கனவே மேற்கண்ட புகார் குறித்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு எண் W.P. No.37612 of 2024–ல் வழக்கு தொடுத்துள்ளதாகவும் தன்னுடைய மனுவில் தெரிவித்திருப்பது அறிய முடிகிறது.

3. இந்நிலையில் மனுதாரரின் புகார் தொடர்பாக மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு வழக்குகளில், W.P. No.17607 of 2023–ல் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றம் 27.03.2025–ல் நாளிட்டு பின்வருமாறு தீர்ப்புரை வழங்கியுள்ளது.

> 4. The learned counsel appearing for the respondent has filed counter affidavit dated 22.01.2024 wherein it is stated that:
>
> "13. On inspection of the building at Old No.7/1, New No.12/1, Ilaya Mudali Street, Tondiarpet, Chennai 600 021, it was found that the above said building belongs to one Mr. K. Rajan. Further, said Mr. K. Rajan has kept the shop in his building as vacant.
>
> On inspection of the building at Old No.26/1, New No.77, Rathna Sahapathy Street, Old Washermenpet, Chennai-600 021, found that the no trade activity is being carried out by the 3rd respondent in the above said building.

14. xxx xxx

5. xxx xxx

6. In view of the above mentioned counter affidavit which states that in the subject matter building no trade activities is carried out by the 3rd respondent which was verified on inspection conducted by the 2nd respondent, nothing survives for adjudication in the writ petition.

7. Accordingly, the writ petition stands disposed of. No Costs."

ஆனால், மனுதாரரால் மீண்டும் இப்பொருள் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் W.P. No.37612 of 2024, தற்போது வரை நிலுவையில் உள்ளது என்பதும் அறிய முடிகிறது.

4. மேற்காண் சூழ்நிலையில், 2014 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 10 (3) (b)—ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:-

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014,
Section 10. (3) The Ombudsman shall not enquire into matters relating to,--

(a) xxx xxx
(b) any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act, 1952 or any matter pending before a Court;
(c) xxx xxx

எனவே, மனுதாரரின் புகார் தொடர்பாக நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள சட்டப்பிரிவின்படி, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025—ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள்17—ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்
(1) திரு. ஜீஜீமாத்யூ,
கதவு எண் பழைய எண் 18, புதிய எண் 61,
ரத்தின சபாபதி தெரு, பழைய வண்ணாரப்பேட்டை,
சென்னை—600 021.

(2) ஆணையர்,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை,
சென்னை–600 003.

(3) மண்டல அலுவலர்,
மண்டலம் 4,
பெருநகர சென்னை மாநகராட்சி,
எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,
சென்னை–600 021.

(4) கண்காணிப்பாளர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
மழைநீர் வடிகால் துறை,
பெருநகர சென்னை மாநகராட்சி,
ரிப்பன் மாளிகை, சென்னை–600 003.

<u>நகல்:</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ / `உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.